நிலம் வாங்கப்பட்டதால் இந்த விலை உயர்வு அங்கே நிர்ணயிக்கப்பட்டது என்பதை இன்றைக்குத் தொழில் முனைவோர்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். ஆதலால் இன்றைக்கு நெருக்கடியாக உள்ள இந்த நேரத்தில் இந்த முத்திரைத்தாள் 13 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது தொழில் முனைவோர்களைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. தயவுசெய்து இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து, கடந்த ஆட்சியில் இருந்ததுபோல, மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இருந்த ஒரு சதவீதம் முத்திரைத்தாளையே வாங்க வேண்டும் என்று நீங்கள் பரிசிலனை செய்து, அதை முடிவு செய்ய வேண்டும் என்று அன்போடு உங்கள் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றையதினம் தொழில் துறையிலே முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக இதை ஆய்வில் கொண்டு, இப்போது ஏற்கெனவே கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில் துறையின் மூலமாக பிற்பட்ட தொழிற்கூடங்கள், மிகவும் பிற்பட்ட தொழிற்கூடங்கள் என்று பிரித்திருக்கிறார்கள். நாங்கள் இதைக் கருத்தில்கொண்டு, இப்போது அரசு அதைப் பரிசிலனை செய்து தொழில் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கான நடவடிக்கை கூடிய விரைவில் எடுக்கப்படும்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

10—

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

***12837—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள வாண்டையாங்குப்பம் கிராமத்தில் உள்ள குளம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் உள்ள வடிகால் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

2002 அக்டோபர் 25]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி, சிதம்பரம் வட்டம், வாண்டையாங்குப்பம் கிராமத்தில் புல எண் 204/2-ல் அமைந்துள்ள குளத்தின் தென்கரையில் இரண்டு நபர்கள் கூரை வீடுகள் மூலமும், அதன் வாய்க்கால் புறம்போக்கில் ஐந்து நபர்கள் வீட்டின் முற்றம் மூலமும், வாய்க்கால் வடிகால் பகுதியில் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் நெற்பயிர் செய்தும் ஆக்கிரமணம் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்கள். இந்த ஆக்கிரமணங்களை விரைவில் அகற்றிவிடுவதாக சிதம்பரம் வட்டாட்சியர் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

திரு. பி.எஸ். அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதியில், வாண்டையாங்குப்பம் கிராமத்தில் 204/2 என்ற புல எண்ணில் அமைந்துள்ள குளத்தின் தென்கரையில் 4 நபர்கள் கூரை வீடுகள் கட்டியும், அதன் வடிகால் வாய்க்கால் புறம்போக்கில் 5 நபர்கள் வீட்டின் முன்பு ஆக்கிரமிப்பும் செய்துள்ளனர். இதன் காரணமாக அந்தக் குளத்திற்கு வர வேண்டிய தண்ணீர் வராமல் அடைக்கப்பட்ட காரணத்தாலும், வாய்க்கால் வடிகால் பகுதியில் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் நெற்பயிர் செய்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாலும், அந்தக் கிராமத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நல்ல குடிநீர் இன்றி, தங்கள் வீடுகளில் வளர்த்துவரும் ஆடு, மாடுகளுக்கு குடிக்க குடிதண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது. இந்தக் குளத்தை தனியார் நபர்கள் ஆக்கிரமிப்பு செய்த காரணத்தால் பல ஆண்டுகளாக இந்தக் குளம் வறண்டு காணப்படுகிறது. கிராமத்தில் மேல் ஊற்று இல்லாத காரணத்தினால் சுமார் 300, 400 அடிகளுக்கு மேல் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தாலும் அங்கே உவர் நீர்தான் கிடைக்கிறது. அதனால், இந்த நிலைமையை எல்லாம் மாற்றிட பல கிராமங்களில் ஏரி மற்றும் குள ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே*

அனைத்து மாவட்டங்களிலும் Steering Committee என்ற ஒரு Committee-யை அமைத்து, அதிலே மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், காவல் துறையின் மாவட்ட அளவிலான அலுவலரை உறுப்பினராகவும், பொதுப் பணித் துறையின் மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரை (நீர்வள ஆதார அமைப்பு) உறுப்பினராகவும், நெடுஞ்சாலைத் துறையின் கோட்டப் பொறியாளரை உறுப்பினராகவும், வனத் துறையின் மாவட்ட வன அலுவலரை உறுப்பினராகவும், மாவட்ட வருவாய் அலுவலரை உறுப்பினர்—செயலராகவும், ஊராட்சி உதவி இயக்குநரை உறுப்பினராகவும், பேரூராட்சி உதவி இயக்குநரை உறுப்பினராகவும், நகராட்சிகளின் நிர்வாகத் துறை மண்டல இயக்குநரை உறுப்பினராகவும், மாநகராட்சிகளின் ஆணையர்களை உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது அவரது சார்பாளரை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இருக்கிறதோ அவற்றை உடனடியாக அகற்றிட மாதந்தோறும் கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமப்புறங்களில் இருக்கின்ற அனைத்து குளங்களையும் வெட்ட வேண்டுமென்ற ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவை அமலாக்கம் செய்து கொண்டிருக்கின்ற அரசு அதிகாரிகள் உள்ளாட்சித் துறை அமைப்பைச் சேர்ந்தவர்கள் அங்கே பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குளங்களிலே இருக்கின்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல், இருக்கின்ற நிலப்பரப்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அதை மட்டும் வெட்டி, அந்தக் குளத்தை இப்போது சரிசெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே வருவாய்த் துறையினர் அந்தக் குளத்தை வெட்டுவதற்கு, முன்பு எப்படி இருந்ததோ அந்தப் புல எண் சர்வே எடுத்து, அந்தக் குளம் எந்த அளவுக்கு விஸ்தீரணம் எப்படி இருக்கிறதோ அந்த அளவுக்கு சர்வே செய்து கொடுத்து, அதை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.